# NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **RM 10,000 By GAB** |
| Publication : | **Makkal Osai, Malaysia** |
| Section : | **General News** |
| Page : | **20** |
| Date : | **19 January 2012** |

புக்கிட் ராஜா தமிழ்ப்பள்ளிக்கு கின்னஸ் - எங்கர் அறவாரியம்

## வெ.10 ஆயிரம் வழங்கியது





G·A·B FOUNDATION




கணினிகளுடன் மாதிரி காசோலையை ரேணுகா, சேலம் கருப்பையாவிடம் வழங்குகிறார் .அருகில் அன்பரசி.

பி.ஆர். ஜெயசீலன்

கின்னான்,ஜன.19—

பண்டார் புக்கிட் ராஜாவில் இயங்கிவரும் புக்கிட் ராஜா தோட்ட தேசிய வகை தமிழ்ப்பள்ளியின் பயன்பாட்டிற்காக கெப் எனப்படும் கின்னஸ் எங்கர் நிறுவன அறவாரியம் மூன்று கணினிகளை வழங்கியது.

பத்தாயிரம் வெள்ளியை இப்பள்ளியின் நன்கொடைக்காக ஒதுக்கிய இந்த அறவாரியம் மூன்று கணினிகளை நேரடியாக வாங்கிக் கொடுத்ததுடன் மீதமுள்ள 5,320 வெள்ளியை பள்ளியின் மேம்பாட்டிற்காக காசோலையாக வழங்கியது.கின்னஸ் எங்கர் அறவாரிய இயக்குநர் ரேணுகா இந்திராராஜா காசோலை, கணினிகளை பள்ளி அறவாரியத் தலைவர் சேலம் கருப்பையா, தலைமை யாசிரியை அன்பரசி ஆகியோரிடம் வழங்கினார்.

இதுபோன்று தமிழ்ப்பள்ளிகளுக்கு இந்த அறவாரியம் தொடர்ந்து உதவி வருவதாகவும் இத்தகைய சமூக நல உதவிகள் தொடரும் எனவும் தனது உரையில் ரேணுகா தெரிவித்தார். புக்கிட் ராஜா தமிழ்ப்பள்ளியின் மேம்பாட்டுப் பணிகளுக்கு உதவும் வண்ணம் இத்தகைய ஏற்பாட்டினைச் செய்துகொடுத்த நாயகன் இதழின் ஆசிரியர் மலர்விழி குணசீலனுக்கும் கின்னஸ் எங்கர் நிறுவன அறவாரிய பொறுப் பாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி கூறிக்கொள்வதாக தலைமையாசிரியை அன்பரசி தெரிவித்துக் கொண்டார்.